பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ தை மீ 06 உ சனிக்கிழமை (19-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 53

# இஸ்ரவேல் மீதும் ஈராக் தாக்குதல்!

## பதில் தாக்குதல் நடந்தால் உலகப் போர் வெடிக்கும்!

லண்டன், ஜனவரி 19

இஸ்ரவேல் மீதும் ஈராக் நேற்று திடீரென ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

இஸ்ரவேல் பதில் தாக்குதல் நடத்தினால் உலகப் போர் ஒன்று வெடிக்கும் என்று அரசியல் அவதானிகள் அச்சம் தெரிவித்தனர்.

ஈராக்கிற்கு எதிராக இஸ்ரவேல் களத்தில் இறங்கினால், சிரியா, ஜோர்தான் போன்ற நாடுகள் இஸ்ரவேலுக்கு எதிராக யுத்தத்தில் குதிக்கும் என்றும்—

தற்போது பிளவுபட்டு அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் அரபு நாடுகள், தங்கள் பொது எதிரியான இஸ்ரவேலுக்கு எதிராகப் போராடுவதற்காக, அமெரிக்க தரப்பை விட்டு விலகி ஈராக் தலைமையின் கீழ் ஒன்றுபடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அந்நிலை மூன்றாம் உலகப் போர் ஒன்றுக்கு வழிவகுக்கலாம் என்று அச்சம் தெரி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முரணான தகவல்கள்

ஈராக் விமானப்படைக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து முரண்பாடான தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஈராக் விமானப்படையின் விமானங்களில் பாதி அழிக்கப்பட்டு விட்டதாக பிரெஞ்சு அரசு அறிவித்தது. ஆனால் இஸ்ரவேல் அரசோ, ஈராக்கின் போர் விமானங்கள் நிலப்பாதாள அறைகளில் பாதுகாப்பாக இருக்கின்றன என்று அறிவித்துள்ளது.

## வீழ்ந்த விமானங்கள்

பன்னாட்டுப் படைகள் தரப்பின்படி ஏழு (அமெரிக்கா-3, பிரிட்டன்-2, குவைத்-1, இத்தாலி-1) போர் விமானங்களே ஈராக்கினால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் ஈராக் தலைமைப்பீடமோ, 72 போர் விமானங்கள் தமது படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று அறிவித்தது.

## இத்தாலிக்கு இழப்பு

நேற்று ஈராக் மற்றும் குவைத் மீது நடத்தப்பட்ட பன்னாட்டுப் படைகளின் வான் தாக்குதலில் கலந்துகொண்ட 12 இத்தாலிய போர் விமானங்களில் ஒன்று காணாமற்போய் விட்டதாக இத்தாலி அரசு அறிவித்தது.

## இஸ்ரவேல் விமானம்

நேற்றுப் பிற்பகல் எட்டு இஸ்ரவேலிய போர் விமானங்கள் இரண்டு அணிகளாக ஈராக், சிரியா நோக்கி தென் லெபனானின் ஆகாயப் பிராந்திய வழியாகச் சென்றன என்று ஏ. எவ். பி. செய்திஸ்தாபனம் அறிவித்தது.

இதேசமயம் — சிரியாவின் வான் பிராந்தியம் மீதாகப் பறந்து சென்ற இஸ்ரவேல் போர் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஜோர்தான் அறிவித்தது.

## படகுகள் மூழ்கடிப்பு

வளைகுடாவில் காணப்பட்ட ஈராக்கின் மூன்று ரோந்துப் படகுகளை பன்னாட்டுப் படைகளின் போர்க் கப்பல் ஒன்று தாக்கி அவற்றை மூழ்கடித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மாளிகை சேதம்?

பக்தாத்தில் உள்ள ஜனாதிபதி மாளிகைக் கட்டடம், முதல் நாள் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் அழிக்கப்பட்டு விட்டதாக ரஷ்யா அரசாங்கம் நேற்று வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்படுகிறது.

## பஸ்ரா அதிர்ந்தது

பன்னாட்டு படைப் போர்க் கப்பலில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை ஒன்று ஈராக்கின் பஸ்ரா நகரில் விழுந்து வெடித்ததாகவும் – அதனால் அந்த நகரின் எல்லைப்புறத்தில் இருந்த ஈரானின் நகரங்கள் அதிர்ந்தன என்றும் நிக்கோஸியாவில் இருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

## 23 பொதுமக்கள் பலி!

பன்னாட்டுப் படைகள் ஈராக் மீது நடத்திய முதல்நாள் வான் தாக்குதலில் 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும், 66 பேர் காயமடைந்தனர் என்றும் பக்தாத் வானொலி அறிவித்தது.

## மக்களுக்கு ஆயுதம்

போரில் நேரடியாக ஈடுபடுவதற்காக ஈராக் தனது மக்களுக்கு துப்பாக்கிகளும் மற்றும் ஆயுதங்களும் வழங்கி வருவதாக ஈராக் சபாநாயகர் நேற்று தெரிவித்தார்.

## தொழுகையில் சதாம்

ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்று பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டதை பக்தாத் டெலிவிஷன் நேற்று ஒளிபரப்பியது.

## ரூ.2,000 கோடி செலவு

வளைகுடாப் போரின் முதல் நாள் பன்னாட்டு படைகள் நடத்திய வான் தாக்குதலுக்கான செலவினம் இலங்கை நாணயப்படி 2 ஆயிரம் கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

முதல் நாள் பன்னாட்டுப் படைகள் நூறுக்கு மேற்பட்ட ஏவுகணைகளை ஏவின.

ஈராக் விடுத்த ஏவுகணை ஒன்று டஹ்ரானின் நடுவானில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்த ஏவுகணை அமெரிக்காவினால் பத்து லட்சம் டாலர் செலவில் தயாரிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கேரதீவு நீரிணையில் 2 பேரை காணவில்லை

பூநகரி, ஜன. 19

சங்குப்பிட்டி - கேரதீவுக்கு இடைப்பட்ட நீரிணைப் பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் தேங்காய் எண்ணெய் பரல்களைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்த 8 பேரில் இருவர் திடீரெனக் காணாமற் போய்விட்டனர்.

இந்தப் பகுதியில் நேற்றுக் காலநிலை சீரற்றிருந்தது. காற்றும் கடுமையாக வீசியது. இதனால் படகுச்சேவைகளும்கூட இடையிடையே தடைப்பட்டே நடந்தன.

எண்ணெய் பரல்களை இழுத்து வந்தவர்களில் அறுவர் கரைக்கு வந்து தெரிவித்த தகவலை அடுத்து, காணாமற் போன இருவரையும் தேடும் முயற்சி இரவிரவாக நடந்து கொண்டிருந்தது. (ஓ)

## கொழும்பிலும் ஆர்ப்பாட்டம்

லண்டன் ஜன. 19

ஈராக்கிற்கு ஆதரவாகக் கொழும்பில் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். (உ-5)

## கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 19

மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச் சோலையில் சுந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினர் ஒருகடை, இரண்டு வீடுகளில் கொள்ளை நடத்திவிட்டு, அவற்றை எரித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## காசோலைக்குகமிஷன்; எமக்குத் தொடர்பில்லை

### புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

அரசாங்கத் திணைக்களங்களினால் அவற்றின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் காசோலைகளைப் பணமாக மாற்றுவதற்கு சில உரித்த கடைகள் தரகுப் பணமாக (கமிஷனாக) ஆயிரம் ரூபாவுக்கு 100 ரூபா முதல் 150 வரை அறவிடுகிறார்கள்.

அவர்களில் பலரும் தாம் அறிக கமிஷன் அறவிடுவதற்கு விடுதலைப் புலிகள் மீது பழியைச் சுமத்துவதாகவும்.

காசோலைக்கு கமிஷன் வழங்கும் விடயத்தில் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும்— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

போராட்டச் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி மக்களை இன்னல்களுக்கு ஆளாக்கும் எந்தச் செயலுக்கும் விடுதலைப் புலிகள் ஒப்புதலோ, ஒத்துழைப்போ அளிப்பதில்லை என்று – விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## இரு தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஜன 19

திருகோணமலை மாவட்டம் நிலாவெளி, 6 ஆம் கட்டை முகாமில் இருந்து வந்த இராணுவத்தினர் சாம்பல்தீவில் இருவரை அடித்து துன்புறுத்தி அவர்களை கைது செய்து முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

சாமிநாதன், துரை என்ற இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். (ஓ)

## காலமானார்

யாழ்ப்பாணம். ஜன. 19

யாழ் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும் குடாநாட்டின் பிரபல விளையாட்டுத் துறை வல்லுநருமான பொன். மகேந்திரன் நேற்று மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 59

## முச்சந்தி முரளி



அப்பா... வானம் வெளிச்சதும் வட்டமிடத் தொடங்கிவிடுவினம் எண்டு சொல்லுங்கோ......!

## விமானப் படையினரின் நடவடிக்கை நிறுத்தம்!

இலங்கையின் வடபகுதியில் மோசமான பருவ நிலை காரணமாக விமானப் படையின் நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. உலகத்தின் கவனம் முழுவதும் வளைகுடாப் பக்கம் திரும்பியுள்ள இந் நேரத்தில் இலங்கை இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் பெரிய தாக்குதலை நடத்தக்கூடும் என பார்வையாளர்கள் கருதுவதாக பி. பி. ஸி. அறிவித்தது. (உ-5)

## சதாம் குடும்பம் வெளியேறியது

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் குடும்பத்தவர்களும், ஈராக் அரசின் உயர் அதிகாரிகள் பலரும் ஈராக்கிலிருந்து மேற்கு ஆபிரிக்க நாடான மொரிட்டேனியாவுக்கு வெளியேறியதாக அறிவிக்கப்படுகிறது.

## பங்கரில் சந்திப்பு

பக்தாத் நகரில் உள்ள பங்கர் ஒன்றில் ஜனாதிபதி சதாம் ஹுசேனை ஈராக்கிற்கான சோவியத் யூனியனின் தூதர் சந்தித்துப் பேசினார்.

இதேவேளை — ஜனாதிபதி மாளிகை இரண்டாவது நாளாக நேற்றும் பன்னாட்டுப் படைகளின் விமானத் தாக்குதலுக்கு இலக்கானது என்றும், ஜனாதிபதி சதாம் அத்தாக்குதலில் இருந்து உயிர் தப்பினார் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

## அமெரிக்காவில் கிலி

அமெரிக்க நாடாளுமன்றக் கட்டடத்தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த அனாமதேயத் தகவலைத் தொடர்ந்து அங்கு வேலை செய்துகொண்டிருந்த சுமார் 5 ஆயிரம் பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினர் சோதனை நடத்தினர். ஆனால் குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## சுதந்திரம் கிடைக்குமா?

குவைத்தின் சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி 25ஆம் திகதி ஆகும்.

அன்றைய தினத்துக்கு முன்னர் பன்னாட்டுப் படைகள் குவைத்தை, ஈராக் படைகளின் பிடியில் இருந்து விடுவித்துவிடும் என்று வெளிநாடுகளில் வசிக்கும் குவைத் பிரஜைகள் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

## போர்க்களத்தில் 4 வகை விமானங்கள்

ஈராக்கின் மேற்குப் பிரதேசத்தில் உள்ள ஏவுகணைத் தளங்களின் மீது பன்னாட்டுப் படைகள் நேற்று நடத்திய வான் தாக்குதலில் அமெரிக்காவின் பி 52, எவ் 117 பொம்மர்களும் பிரிட்டனின் ரோனடோ பொம்மர்களும் பிரான்ஸின் ஜாகுவார் பொம்மர்களும் ஈடுபட்டன.

12 ஜாகுவார் பொம்மர் விமானங்கள் நேற்று குவைத்தில் ஈராக்கின் ஆயுதக்கிடங்கு ஒன்றைத் தாக்கி முற்றாக அழித்தன என்று பிரான்ஸ் அறிவித்தது.

## அமெரிக்க வீரர்கள் அகப்பட்டனர்

சுட்டு வீழ்த்தப்பட்ட பன்னாட்டுப் படைப் போர் விமானங்களில் இருந்து அமெரிக்க வீரர்கள் சிலரை ஈராக் வீரர்கள் பிடித்துள்ளதாகவும்— அவர்களைச் செய்தியாளர்களுக்குக் காட்ட முடியும் என்றும் பக்தாத் அரசு நேற்று அறிவித்தது.

## தாக்குதல் தொடருமாம்

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இருந்து வெளியேறும்வரை இஸ்ரவேல் மீதான ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தப்போவதாக ஈராக் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

## இஸ்ரவேலின் பங்கு

இஸ்ரவேலில் இருந்து 64 போர் விமானங்கள் பன்னாட்டுப் படைகளுடன் சேர்ந்து கொள்வதற்காக நேற்று புறப்பட்டுச் சென்றன என்று ஒரு செய்தி தெரிவித்தது.

## வெற்றி இலகு அல்ல!

வளைகுடாப் போரில் இலகுவான, விரைவான வெற்றியை எதிர்பார்க்க முடியாது என்று ஜனாதிபதி புஷ் தெரிவித்தார். முதல் நாள் வான் தாக்குதலின் பின்னர் ஜனாதிபதி புஷ் இதனை வெள்ளைமாளிகைச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## ஜப்பான் தாராளம்

வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள பன்னாட்டுப் படைகளுக்கு ஜப்பான் மேலும் நிதி உதவி அளிக்கப் போவதாக அறிவித்துள்ளது. குறைந்தது 200 கோடி டொலர்கள் உதவியாக வழங்கப்படும் என்று ஜப்பான் பிரதமர் திரு. கைபு அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா

எமது கல்லூரியின் பழைய மாணவரும், நீண்ட காலமாக ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திரு. பொன். மகேந்திரன் அவர்களின் திடீர் மறைவு காரணமாக, 18-1-1991 (பிற்பகல் நிகழ்ச்சிகளும்) 19, 20-01-1991 ஆம் நாள் நிகழ்ச்சிகளும் மறு அறிவித்தல் வரும்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

சுந்தரம் டிவகலாலா
சே. சிவராஜா, செயலர்,
க. சி. குகதாசன், தலைவர்.
நூற்றாண்டு விழாச்சபை
18-01-1991. [சி/5659]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
15 - 06 - 1910

மறைவு:
20 - 12 - 1990

## அமரர் வ. அப்பாத்துரை அவர்கள்

நீதி, நேர்மை, கடமை, கட்டுப்பாடு இவைகளின் அணிகலனாய் வாழ்ந்து வந்த அமரரின் ஆத்மசாந்திக் கிரியை எதிர்வரும் 19 - 1 - 1991 சனிக்கிழமை அன்னாரது உரும்பராய் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை

லீலாவாசா
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (15556)

# அஞ்சலி

## அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவரும்
நீண்ட காலம் கல்லூரியின் ஆசிரியராகவும்,
பிரதி அதிபராகவும் பணியாற்றி
அண்மையில் ஓய்வு பெற்றவருமாகிய
அமரர் பொன். மகேந்திரன்
அவர்களின்

திடீர் மறைவுக்கு யாழ். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தனது ஆழ்ந்த கவலையையும் அஞ்சலியையும் அவர் தம் குடும்பத்தாருக்குத் தெரிவிக்கின்றது.

க. சி. குகதாசன், தலைவர்/அதிபர்
க. பூபாலசிங்கம், பொதுச்செயலாளர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்ப்பாணம். 19. 01. 1991.
[சி - 5659]

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் கழகத்தின் நீண்டகால உறுப்பினரும், கழக முன்னாள் செயலாளரும், மிக அண்மையில் ஓய்வுபெற்ற உப-அதிபருமான பொன். மகேந்திரன் அவர்கள் 18-1-1991 இல் அமரத்துவம் எய்திவிட்டார். அன்னாருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

—ஆசிரியர் கழகம்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
[C/5657]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பிந்திய செய்தி

# பதில் தாக்குதல் இஸ்ரவேல் நடத்தாது!

ஈராக் இனிமேல் ஏவுகணைத் தாக்குதல் எதனையும் நடத்தாவிட்டால், இஸ்ரவேலும் இப்போதைக்கு பதில் தாக்குதல் எதையும் நடத்தாது.

— இவ்வாறு இஸ்ரவேல் அமைச்சரவை நேற்று முடிவு செய்தது.

இன்று அதிகாலை வெளியான செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

# ஈராக்கிடம் தற்போது 800 ஏவுகணைகள்!

இஸ்ரவேலைத் தாக்கக்கூடிய நீண்டதூர ஏவுகணைகள் எண்ணூறுவரை ஈராக்கிடம் இருப்பதாக செய்தி ஒன்று தெரிவித்தது.

அவை எங்கே வைக்கப்பட்டுள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும்—

அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளில் பன்னாட்டுப் படைகள் ஈடுபட்டிருப்பதாகவும் அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஈராக்கின் மேற்குப் பிரதேசத்தில் இதுவரை பல நடமாடும் ஏவுகணைத் தளங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும்—

அவற்றில் ஆறு நேற்று நடத்தப்பட்ட வானத்தாக்குதலில் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் அமெரிக்கத் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

★ தனது நாட்டில் உள்ள விமானத்தளங்களைப் பாவிக்க அமெரிக்கப் படைகளுக்கு துருக்கி அரசு அனுமதி அளித்து உள்ளது. இதனைத் தொடர்ந்து, ஈராக், குவைத் மீது நேற்று நடத்தப்பட்ட ஆகாயத் தாக்குதலில் துருக்கி விமானத் தளங்களில் இருந்து புறப்பட்டுச் சென்ற அமெரிக்கப் போர் விமானங்களும் கலந்து கொண்டன.

★ இஸ்ரவேல் மீது ஈராக் நடத்திய ஏவுகணைத் தாக்குதல் பற்றி ஆராய பிரிட்டனின் யுத்தகால அமைச்சரவை (War Cabinet) நேற்று அவசரமாகக் கூடியது. நேட்டோ நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டமும் நேற்று நடந்தது.

★ வளைகுடா போர் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி ஜேர்மன் தலைநகர் பொன்னில் சுமார் ஒரு லட்சம் பேர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பாரிஸில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 40 ஆயிரம்பேர் கலந்து கொண்டனர்.

★ புதுடில்லியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

நேற்று பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையை முடித்துக் கொண்டு வந்த கூட்டத்தினர் சிலர், ஆறு வாகனங்களைக் கற்களால் தாக்கிச் சேதப்படுத்தினர். பின்னர் இரண்டு கான்ஸ்டபிள்களைக்கத்தியால் குத்தினர்.

★ தனது வான் பிராந்தியத்தைப் பாதுகாக்க ஜோர்தான் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜோர்தான் முடிக்குரிய இளவரசர் இதனை நேற்றுத் தெரிவித்தார்.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் கல்லூரியின் நீண்ட கால ஆசிரியரும், முன்னாள் பிரதி அதிபரும், எமது சங்கத்தின் மூத்த உறுப்பினருமாகிய பொன். மகேந்திரன் அவர்களின் திடீர் மரணச் செய்தி சகல உறுப்பினர்களுக்கும் அதிர்ச்சி தருவதாக அமைந்துள்ளது.

சங்கம் தனது ஆழ்ந்த கவலையை அவர் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் தெரிவிக்கின்றது.

டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்
தலைவர்.

சுந்தரம் டிவகலாலா
பொதுச் செயலாளர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

பி. கு:- கல்லூரியின் சகல பழைய மாணவர்களையும் நாளை காலை 8 மணிக்கு அமரரின் இல்லத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
[சி-5658]

# அடக்க ஆராதனை

## சகோதரி சித்திரா சேவியர்

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (19-01-91) பிற்பகல் 1 00 மணிக்கு இலங்கை பெந்தேகொஸ்தே சபை சுண்டுக்குளி விசுவாச வீட்டில் இடம்பெறும்.

ஆராதனையின் பின் பூதவுடல் நல்லடக்கத்துக்காகத் துண்டிச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை யாவரும் அன்போடு ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கை பெந்தேகொஸ்தே சபை,
111, கண்டி வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
சகோதரன் A. மகேந்திரன்
(15233)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்துக் கல்லூரியின்
முன்னாள் பிரதி அதிபரும்
பிரபல விளையாட்டுத்துறை
வல்லுநருமான

## பொன். மகேந்திரன்

அவர்களுக்கு
எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்.

— ஷப்றா விளையாட்டுக் கழகம் —

யாழ். இந்துவின் முன்னாள் உப அதிபர்

## திரு. பொன். மகேந்திரன்

அவர்களுக்கு

# எமது கண்ணீர் அஞ்சலிகள்

எங்களிந்துவின்
சோதியொன்று
நேற்று அணைந்தது
நெஞ்சு கனத்தது

சொல்லியழ ஒரு
வார்த்தை தேடுது
சொந்தங்களுடன்
வேதனை பகிருது.

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள்.
(C/5661)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கி. சரோஜினிதேவி (பூமணி)

திருமதி சரோஜினிதேவி (பூமணி) கிருஷ்ணசாமி 16 - 01 - 91 அன்று சிவபதமடைந்தார்.

இவர் புங்குடுதீவு பொன்னாந்தோட்டம் 10ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், இலக்கம் 854, கே. கே. எஸ். வீதியில் வசிப்பிடமாகக் கொண்டவரும், திரு. த கிருஷ்ணசாமியின் (பிரபல வர்த்தகர் - கொழும்பு) பாசமிகு அன்பு மனைவியும், செல்வன் சிவகுமார் (லண்டன்), செல்வன் ஜீவகுமார் (கனடா), செல்வன் விஜயகுமார் (லண்டன்) செல்வன் ரூபகுமார் [யாழ். இந்துக்கல்லூரி], செல்விகள் தளாயினி, நிலாயினி, சங்கீதா [யாழ் இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ஐ. ஆறுமுகம், காலஞ்சென்ற பூரணம் தம்பதிகளின் அருந்தவப் புதல்வியும், காலஞ்சென்ற திரு ஆ. துரைச்சாமி (விஜயா ரேடிங் கொம்பனி - கொழும்பு). திரு. ஆ. கனகலிங்கம் [சுகந்தா ரேடர்ஸ் கொழும்பு]. திரு. ஆ. விஜயரட்ணம் (கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. த. தர்மலிங்கம் [இளைப்பாறிய கபாலக உத்தியோகத்தர்], காலஞ்சென்ற திருமதி சுப்பையா சிவசாமிப்பிள்ளையின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை [20 01-91] காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் இறுதிக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
த. கிருஷ்ணசாமி.
854, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
[15552]

## பொன்னுத்துரை சிவசூரியர்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

சண்டிலிப்பாய் நடுக்குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாக கொண்டவருமான பொ. சிவசூரியர் அவர்கள் 18-01-1991 இல் காலமானார்.

இவர் ஞானாம்பாளின் அன்புக் கணவரும், மகேந்திரராஜா [பொறியியலாளர், அவுஸ்திரேலியா], ஜெயந்திரன் [அரசாங்க நில அளவையாளர், வவுனியா], சிவநிதி.- பாலேந்திரன் [சட்டத்தரணி, U.K], செல்வநிதி [U.K], குலேந்திரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், உஷா [அவுஸ்திரேலியா]. சாந்தினி, நாகேந்திரா [பொறியியலாளர்], உஷா [சட்டத்தரணி, U K], திருமுகன் [பொறியியலாளர், U.K] ஆகியோரின் அன்பு மாமனாரும் ம. ஆசித்தா [U.K], ம. பிரகரன் [U,K], ஜெ. அனுஜா, நா. ரஜீவன், நா. ரதன், பா. றெஷ்மி [U K] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி
9/1, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(15558)

## உதயன்

### மண்ணெண்ணை மர்மம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில், வளைகுடா யுத்தத்தின் முதல் விளைவு மண்ணெண்ணை விவகாரத்தில் பிரதிபலித்தது எனலாம். ஏற்கனவே சந்தைக்கு வருவதும், அரிதாக இருந்த அந்த வீட்டு எரிபொருள் வியாழன் மாலை தொடக்கம் மக்கள் கண்ணுக்குப் படாமலே மர்மமாக மறைந்துவிட்டது.

கடந்த ஜூனில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமான போது, குடாநாட்டுக்கு மண்ணெண்ணை உட்பட மற்றும் எரிபொருள்களைக் கொண்டு வந்து சேர்ப்பது முயற்கொம்பாக இருந்தது உண்மைதான். எனினும் பின்னர் மண்ணெண்ணையைப் பொறுத்தவரையில் நிலைமை ஓரளவு திருந்தியது.

நவம்பரில் அதனைக் கொண்டு வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியதோடு நிலைமை மேலும் சீரடைந்தது. போக்குவரத்துக் கஷ்டங்களால் அதிகளவில கொண்டுவர முடியவில்லை எனினும் சுமாரான அளவு லொறிகளில் கொண்டுவரப்பட்டது.

எனினும் வளைகுடா நெருக்கடி உருவடைகிறது என்று அறிந்ததும் வியாபாரிகள் மண்ணெண்ணையைச் சந்தைக்கு விடாமல் ஒளித்துச் செயற்கைத் தட்டுப்பாட்டை உண்டாக்கினார்கள். யுத்தம் வெடித்தால் கையிருப்பில் உள்ள சரக்கை பல மடங்கு விற்றுப் பணம் சேர்க்கலாம் என்ற பேராசை நியாயமற்ற ஆசையே அதற்குக் காரணம். இதில் ஒழிவு மறைவு இருக்க முடியாது. கஷ்ட நஷ்டமும் செல்ல இடமில்லை.

சமீபத்தில் கொழும்பில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன. மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்து வருகிறது.

ஆனால் இங்கு யுத்த நிலைமை நீடிப்பதைச் சாட்டாக வைத்துக் கொண்டு, கையிருப்பில் இருந்த மண்ணெண்ணை பதுக்கப்பட்டு விட்டது. வளைகுடாவில் இருந்தே எரிபொருள்கள் வர வேண்டும். யுத்தம் நீடித்தால் அவை வருவதில் தடங்கல் ஏற்படலாம். தடங்கல் தட்டுப்பாடாக மாறலாம். அவ்வேளையில் மண்ணெண்ணையை கொள்விலையை விட பத்தல்ல நூறு மடங்கு அதிகமாக விற்கலாம் என்பது வியாபாரிகளின் உத்தேசம். இது எவருக்கும் புரியாத புதிரல்ல.

இதனை ஒரு பொழுதேனும் அனுமதிக்கக் கூடாது. ஏனைய வர்த்தகர்களும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றத் தூண்டுவதாக அமையும். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல, ஏற்கனவே பொருள் தட்டுப்பாட்டாலும், விலைவாசி உயர்வாலும் நொந்துபோயிருக்கும் தமிழ் மக்களை செயற்கைத் தட்டுப்பாடுகளும் பதுக்கல்களும் பாதிக்க இடம் கொடுத்தல் ஆகாது.

வர்த்தகர்கள் பொருள்களை நியாய பூர்வமான லாபத்துடன் விற்க வகை செய்யவேண்டும். இல்லையேல் பதுக்கலையும், கொள்ளை லாபத்தையும், தலைவிரித்தாடவிட்டு, சமூக விரோதிகள் மக்கள் மீது தொடர்ந்தும் குதிரைவிடவே செய்வர்.

பொறுப்பு வாய்ந்தவர்கள் இது குறித்து உடனடியாகக் கவனம் செலுத்துவார்களாக.

# கடும் மழையால் நேற்று போக்குவரத்து பாதிப்பு

பூநகரி ஜன. 19

பூநகரி — கிளிநொச்சிக்கும் இடையேயான போக்குவரத்துக்கள் நேற்று பாதிப்புற்றன.

கடும் மழை காரணமாக பூநகரிக்கும் பரந்தனுக்கும் இடையிலுள்ள கந்தன்குளம் உடைப்பெடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பூநகரி, நல்லூர்ப் பகுதியிலும் குடம்உருட்டி வாய்க்கால் மேவிப் பாய்ந்தது.

இதனால் இப்பகுதியூடாக வாகனப் போக்குவரத்துகள் தடைப்பட்டன. எனினும் சைக்கிள்காரர்கள் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சிப் பகுதியிலும் நேற்று கனத்த மழை பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 19

வீட்டுக்கு அருகில் கிடந்த வெடிக்காத துப்பாக்கி ரவை ஒன்றை எடுத்து குத்திப் பார்த்தபொழுது அதுவெடித்தது. அதனைக் குத்திப்பார்த்த இளைஞர் காயமடைந்தார்.

அச்சுவேலி கதிரிப்பாயில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கு. தனலிங்கம் (16 வயது) என்பவரே காயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-15)

## பரீட்சை

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் 2ஆம் வருட (1991) ஆசிரிய, மாணவருக்கு சென்ற ஆண்டிற்குரிய உள்ளகப் பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் தொடர்ந்து 5 நாட்களுக்கு நடைபெறும். (இ-6)

## பல்கலை மாணவருக்கு வேண்டுதல்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். பல்கலைக் கழகத்தில் பயிலும் தென் தமிழீழத்தைச் சேர்ந்த மாணவர்களை இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பல்கலைக்கழக அடையாள அட்டையுடன் சமுகம் தருமாறு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஓ)

## கப்பல் வருவதில் காலதாமதம்

பருத்தித்துறையில் பொருள்களை இறக்குவதில் கஷ்டங்கள் இருப்பதால் "லங்கா சிறி" கப்பல் நேற்றுவரை கொழும்பில் இருந்து புறப்படவில்லை என்று அங்கிருந்து தகவல் கிடைத்துள்ளது. அது வருவதில் காலதாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

குமண கப்பல் இப்போது பருத்தித்துறையில் தங்கி நிற்பது தெரிந்ததே.

இதே வேளை அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் நேற்றுக் கொழும்பிலிருந்து புறப்பட்டார் எனவும் அறியவந்தது. (அ-6)

# யாழ். இந்து சமுகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பு

## அதிபர் இரங்கற் செய்தி

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் பொன். மகேந்திரனின் மறைவு யாழ். இந்து சமூகத்துக்குப் பேரிழப்பு.

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. க.சி. குகதாசன் நேற்று விடுத்த இரங்கற் செய்தியில் தெரிவித்தார்.

கல்லூரியின் பழைய மாணவரும், நீண்டகால ஆசிரியரும், அண்மையில் ஓய்வு பெற்ற பிரதி அதிபருமான பொன். மகேந்திரனின் திடீர் மரணச் செய்தி எம்மை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

அவர் என்னுடன் பணியாற்றியபோது சகல விடயங்களிலும் கல்லூரியை முன்வைத்துத் தன் கடமைகளை இயற்றினார். அவரது மறைவு தனிப்பட்ட முறையில் எனக்கும், கல்லூரிச் சமூகத்துக்கும் பேரிழப்பாகும்.

அமரர் மகேந்திரன் அவர்களது இறுதி யாத்திரையில் கலந்து கொள்ளுமாறு சகல மாணவர்களையும், ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கின்றேன். - இவ்வாறு அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# இஸ்ரவேல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

ஈராக்கிற்கு எதிராக பதில் தாக்குதல் நடத்த வேண்டாம் என்று அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இஸ்ரவேலை வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன.

ஆனால்— பதில் தாக்குதல் நடத்தும் நிலையில் இருக்கும்படி தனது விமானப்படைக்கு இஸ்ரவேல் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

நிலைமையை ஆராய இஸ்ரவேல் அமைச்சரவை அவசரமாகக் கூடியது.

பதில் தாக்குதல் நடத்தும் உரிமை இஸ்ரவேலுக்கு இருப்பினும், பொறுமையைக் கடைப்பிடிக்குமபடி ஜெருசலம் அரசை அமெரிக்கா கோரியுள்ளது.

இஸ்ரவேலின் பதில் தாக்குதல், ஈராக்கின் மீது நடத்தப்பட்டுவரும் யுத்தத்தின் தாக்கத்தைப் பலவீனப்படுத்திவிடும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

இதே வேளை—

இஸ்ரவேல் மீதான தாக்குதலில் 15 பேர் காயமுற்றனர்.

இதற்கிடையில்—

இஸ்ரவேல் மீது ஈராக் ஏவிய ஏவுகணைகளில் ஒன்றில் இரசாயனக் குண்டு பொருத்தப்பட்டிருந்ததாக டெல் அவிவ் ஆஸ்பத்திரி வட்டாரங்களை மேற்கோள் காட்டி அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

தாக்குதலில் காயமடைந்த சிலருக்கு நச்சு வாயுவினால பாதிக்கப்பட்ட தற்கான சிகிச்சை அளிக்கப்பட்டதாக இஸ்ரவேல் வானொலி அறிவித்தது.

ஆனால் நச்சுவாயு, இரசாயனக்குண்டு ஆகியவை பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ஈராக் மறுத்துள்ளது.

ஈராக் நடத்திய ஏவுகணைத் தாக்குதலின் போது, முகமூடிகள் அணிந்தபடி நச்சுவாயு புகாத 'சீல்' செய்யப்பட்ட அறைகளுக்குள் தஞ்சமடைந்தவர்களில் ஐந்து பேர் மூச்சுத் திணறல் காரணமாக உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

# ஈராக்கின் 'ஸ்கட்' ஏவுகணைகள் இஸ்ரவேல் நகரங்களைத் தாக்கின

டெல்அவிவ் ஜன 19

இஸ்ரவேல் மீதான ஏவுகணைத் தாக்குதலை ஈராக் நேற்று அதிகாலை ஆரம்பித்தது.

குறைந்தது எட்டு ஸ்கட் ஏவுகணைகள் இஸ்ரவேலை தாக்கின.

தலைநகர் டெல்அவிவ் மீது இரண்டு ஏவுகணைகள் விழுந்து வெடித்தன. இரண்டு ஏவுகணைகள் ஹைபா துறைமுக நகரில் விழுந்து வெடித்தன. எஞ்சியவை மக்கள் நடமாட்டமற்ற கிராமப்புறப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. தாக்குதலின் போது ஏழு பேர் காயமடைந்தனர் என்று முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## இஸ்ரவேலைத் தாக்க நடமாடும் ஏவுகணை

இஸ்ரவேல் மீதான ஏவுகணைத் தாக்குதலை ஈராக் நடமாடும் ஏவுகணை தளம் ஒன்றில இருந்தே மேற்கொண்டதாக மாஸ்கோ வானொலி அறிவித்தது. பன்னாட்டுப் படைகளின் முதல்நாள் வான் தாக்குதலின்போது ஈராக்கின் நடமாடும் ஏவுகணைத் தளங்களுக்குச் சேதமேற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

இஸ்ரவேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்திய செயலை அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரும் வன்மையாகக் கண்டித்தனர்.

அதே சமயம் ஈராக் மீதான யுத்தத்தை நிறுத்த உத்தரவிடுமாறு லிபியா, யேமன், அல்ஜீரியா ஆகிய நாடுகள் ஐ. நா. பாதுகாப்புச்சபைக்கு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளன.

## உறுதி அளிக்க மறுப்பு

ஈராக் மீது பதில் தாக்குதல் நடத்த மாட்டோம் என்று அமெரிக்காவுக்கு உறுதி அளிக்க இஸ்ரவேல அரசு மறுத்துவிட்டது.

பதில தாக்குதல் நடத்தும் உரிமை தமக்கு இருப்பதாக இஸ்ரவேல் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி புஷ் நேற்று அவசரமாக இஸ்ரவேல பிரதமர் ஷாமிருடன் தொடர்பு கொண்டு, பதில் தாக்குதலில் இறங்க வேண்டாம் என்றும் ஈராக் மீதான பதில் தாக்குதலை அமெரிக்க படைகள் நடத்தும் என்றும கூறியிருந்தார்.

அதே சமயம் இஸ்ரவேல் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடியாக பன்னாட்டுப் படைகள் நேற்று ஈராக்கின் மேற்கு பிரதேசத்தில் உள்ள ஏவுகணைத் தளங்கள் மீது கடும் வான் தாக்குதலை ஆரம்பித்தன.

## சரணடையக் கோரி குவைத்தில் துண்டுப்பிரசுரம்

குவைத்தில் நிலை கொண்டுள்ள ஈராக் படைகளை சரணடையும் படி பன்னாட்டுப் படைகள் தலைமையகம் கேட்டுள்ளது.

இந்த வேண்டுகோள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை பன்னாட்டுப் படைகளின் போர் விமானங்கள் நேற்று குவைத்தில் பல பகுதிகளில் வீசின.

அதேசமயம் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் உடனடியாகச் சரணடைய வேண்டும் என்று அமெரிக்க வெள்ளை மாளிகையில் வெளியான அறிவிப்பு ஒன்று கோரியது.

## சிங்கப்பூரும் உதவி

வளைகுடாப் போரில் காயமடையும் பன்னாட்டுப் படை வீரர்களுக்குச் சிகிச்சையளிக்கும் பணியில் உதவுவதற்காக சிங்கப்பூர் 35 இராணுவ வைத்திய அதிகாரிகளையும் உதவியாளர்களையும் அனுப்பிவைத்துள்ளது.

சவூதி அரேபியாவின் போர் முனையில் இருந்து 400 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றில இவர்கள் பணியாற்றுவர்.

சிங்கப்பூர் தனது 25 ஆண்டு கால சரித்திரத்தில் யுத்தம் ஒன்றில் பணிபுரிய தொண்டர் குழு ஒன்றை அனுப்பி வைத்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## எண்ணெய் விலை வீழ்ச்சி

உலக சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்ததாக நேற்று அறிவிக்கப்பட்டது. இஸ்ரவேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதலை ஆரம்பித்ததன் எதிரொலியாக இந்த வீழ்ச்சி ஏற்பட்டதாக அறியக்கிடைக்கிறது.

டோக்கியோ சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 21 டொலரால் குறைந்தது. லண்டனில் தங்கத்தின் விலை ஓர் அவுன்ஸ் 379 டொலராகக் குறைந்தது. இதற்கு முன்னர் இதன் விலை 403 டொலராக இருந்தது.

நியூயோர்க் உலக சந்தையிலும் நேற்று ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 9 டொலர்களால் வீழ்ச்சியடைந்தது.

## ஈரானின் எச்சரிக்கை

தனது நாட்டின் நலனுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகுமானால், வளைகுடாப் போரில் தானும் சம்பந்தப்பட வேண்டி நேரிடும் என்று ஈரான் ஜனாதிபதி ரவ்சன் ஜானி நேற்று எச்சரித்தார்.

## அண்டை நாடுகளுக்கு அகதிகள் படை எடுப்பு

ஈராக் நாட்டை விட்டு வெளியேறும் அகதிகள் ஜோர்தானிலும், சிரியாவிலும் தஞ்சமடைந்து வருகின்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. போர் நடக்கும் பகுதிகளில் இருந்து சுமார் 15 லட்சம் அகதிகள் வெளியேறலாம் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எதிர்பார்க்கின்றது.

ஒருவரும் அகதிகளுக்கு இடமளிப்பதற்காக 11 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த ஈராக்குடனான தனது எல்லையை திறக்க சிரியா முடிவுசெய்துள்ளது.

## வெற்றியில் சதாம் இன்னும் நம்பிக்கை

பன்னாட்டுப்படைகள் நடத்திய முதல் நாள் வான் தாக்குதலை அடுத்து, ஈராக்கிய புரட்சிக் கவுன்சில் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தலைமையில் கூடி நிலைமையை ஆராய்ந்தது.

தற்போதைய போரில் ஈராக் வெற்றி பெறுவது நிச்சயம் என்று கூட்டத்தில் ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்தார்.

இதே வேளை— ஜனாதிபதி சதாம் நேற்று பாக்தாத் நகரில் உள்ள டெலிவிஷன் மற்றும் வானொலி நிலையங்களுக்கு விஜயம் செய்தார். பின்னர் ஈராக்கின விமானப் படைத் தலைமை அலுவலகத்துக்கும் ஜனாதிபதி விஜயம் செய்தார் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

# காலம் தப்பிய மழையினால் நெற்செய்கை பாதிப்புறலாம்

யாழ்ப்பாணம், ஜன. 19

நேற்றும் நேற்று முன்தினமும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கனத்த மழை பெய்தது.

காலந்தப்பிய இந்த மழையினால் குடாநாட்டில் நெல் அறுவடை பெரிதும் பாதிக்கப்படலாம் என விவசாயிகள் அச்சம் தெரிவித்தனர்.

பல கிராமங்களில், வயல்களில் நல்ல விளைச்சல் கண்டு நெல்மணிகள் முற்றி அறுவடை செய்யும் பருவத்தை அடைந்துள்ளன. இந்த மழையினால் நெல்மணிகள் வெள்ளத்தில் உதிர்ந்து போகும் ஆபத்து உண்டு என விவசாயிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் முந்திய பெருமழை காரணமாக பல கிராமங்களில் இளம் பயிர்கள் நீரில் மூழ்கி அழுகிப் போனதால் மிகவும் சிரமப்பட்டு தூர இடங்களுக்குப் போய் நாற்று வாங்கி நட வேண்டியதாயிற்று.

விதை மற்றும் உரம் கிருமிநாசினி போன்ற இடுபொருள்களுக்கும், எரிபொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவும் இக்காலத்தில் புதிதாக நாற்றுநட்டதால் அவர்களின் செலவினம் அதிகரித்தது.

முன் மழை இல்லாததால், பொறுத்திருந்து பிந்தி விதைத்தவர்களும், இடையில் வந்த பெருமழைக்கு பயிர் அழிவு ஏற்பட்டு நாற்று நட்டவர்களும் குறுகிய கால நெல்லினங்களையே செய்கை பண்ணினார்கள்.

அதனால் அனேகமான வயல்களில் நெல் முற்றி அறுவடைக்குரிய காலம் நெருங்கிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதாவது குடாநாட்டில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட இடங்களில் 50 முதல் 60 சத வீதமான வயல்களில் நெல்மணிகள் உதிர்ந்து போகும் நிலை அல்லது மடி நெல்லாகும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இம்முறை நெற்செய்கை பெரும் சோதனையிலும் சோதனையாகிவிட்டது என்று விவசாயிகள் வேதனை வெளியிட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**சோதிட மாந்திரீக நிபுணர்**

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 810, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம், வியாழன் விடுமுறை. (15388)

**இரசாயனவியல் நூல்கள்**

A. மாசிலாதவா ஆசிரியரின் அசேதன இரசாயனம், பௌதிக இரசாயனம், புவியியல் ஆகிய நூல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். பொண்ட் கல்வி நிறுவனம் 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்; சுப்பிரமணியம் புத்தகசாலை சிவலிங்கப் புளியடி யாழ்ப்பாணம். (15551

**தவறிவிட்டது**

எனது அடையாள அட்டை இல. 640790407V (கி. உதயகுமார்) 17-1-1991இல் கந்தர் மடம் சந்தியிலிருந்து பலாலி வீதியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு போகும் இடைவழியில் எனது மணிப்பேர்ஸுடன் தவறி விழுந்து விட்டது. தயவுசெய்து எடுத்தவர்கள் எமது ஸ்தாபனத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். அம்பிகாபதி பென்ஸி கூடல், 54, அம்மன் றோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். (15553)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**இராசம்மா தம்பிராசா**
புவியின் மடியில்: 25-08 1921
விதியின் சதியில்: 06-12-1990

நேச மகன்
தனது நெஞ்சில்
வாழ்ந்த அம்மாவே!
ஆசையுள்ள பேரர்களை
அரவணைத்த
அம்மம்மாவே!



திருமதி
**சரஸ்வதி தனபாலசிங்கம்**
புவியின் மடியில் 24-06-1952
விதியின் சதியில்: 06-12-1990

பாச மழை பொழிந்து
நின்ற கணவரது
உயிரம்மா
பேசும் மழலைகளை
பிரிந்ததேன் நீ
கூறம்மா.



பாலகன்
**விதர்ஷன் தனபாலசிங்கம்**
புவியின் மடியில்: 24-08-1989
விதியின் சதியில்: 06-12-1990

வீசும் தென்றலென
வந்தான்
இப் பாலனம்மா
மோசம் நிகழ்ந்ததனால்
கலைந்தது எழில்
கோலமம்மா.

த. தனபாலசிங்கம்

அம்மன் றோட்,
உரும்பராய் தெற்கு.

(15550)

## நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச்சேவை ஸ்தம்பிக்கும்?

நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுக்கு வேண்டிய டீசல் அடுத்த வாரம் மட்டுமே போதுமானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டீசல் தடைப்படுமானால் தற்சமயம் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே இடம்பெறும் இந்தச் சேவை ஸ்தம்பிதமடையலாமென அஞ்சப்படுகிறது.

இச் சேவை நிறுத்தப்பட்டால் யாழ். குடாநாட்டுடன் நெடுந்தீவுக்குள்ள ஒரே ஒரு தொடர்பும் துண்டிக்கப்பட்டுவிடும். (இ-111)

## Computer Programming in BASIC Language

**Commencement:- 27 - 01 - 1991**

Time Table

SATURDAYS
SUNDAYS 10.30 - 12.30

PAYMENT IN INSTALMENTS
CHEQUES ACCEPTED

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street, Jaffna.

(சி-5654)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**Dr. அப்புத்துரை தங்கராஜா**

கொக்குவில் மேற்கு

தோற்றம்: 4-6 1919 மறைவு: 29-1-1990
திதி: 19-1-1991

ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததப்பா; ஆனாலும் ஆறுமோ எம்மனம் ஆறாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(15544)

## லண்டன் பிற்மன்

**சுருக்கெழுத்து / தட்டெழுத்துப் பரீட்சை 1990**

கடந்த ஜூலையில் நடைபெறாத மேற்படி பரீட்சையை இம்மாதம் இறுதியில் நடத்தத் தீர்மானித்துள்ளோம். தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் கல்விப் பிரிவின் மூலம் இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் உடுவில் மகளிர் கல்லூரியில் 21, 22, 23 ஆம் திகதிகளில் பகல் 1—2 மணிக்கும் இடையில் உங்கள் ஆசிரியையை தவறாமல் சந்தித்துப் பரீட்சை நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளவும்.

-பொதுமுகாமையாளர்
தெல்லிப்பழை, ப. நோ. கூ. சங்கம்.

(சி/5653)

## ஒஸ்லோ கல்விநிலையம்

கச்சேரி நல்லூர் வீதி,

**A/L 91,92 புதியவகுப்புகள்**

| | |
|---|---|
| பொருளியல் | - உதயன் |
| கணக்கியல் | - இந்திரமோகன் |
| வர்த்தகம் | - பசில |
| இந்துநாகரிகம் | - காரைசுந்தரம்பிள்ளை |
| தமிழ் | - வைகுந்தநாதன் |
| புவியியல் | - முருகையா |
| அளவையியல் | - யுகபாலசிங்கம் |

ஆரம்பம் - தை 20

ஆண்டு 5, 6, 7, 8, 9, 10, 11

புதிய வகுப்புகள் ஆரம்பம் - தை 28

(15232)

## நினைவு அஞ்சலி

**1ஆம் ஆண்டு 6ஆம் ஆண்டு**





**திரு. வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை**
மண்ணில்: 13 - 04 - 1917
விண்ணில்: 29 - 01 - 1990

**திருமதி அழகம்மா முருகுப்பிள்ளை**
மண்ணில்: 31 - 07 1921
விண்ணில்: 31 - 08 - 1984

வாழ்வில் வழிகாட்டினராய் நீங்கள் இருவரும் விண்ணில் நின்றும் எங்களை வழிகாட்டி ஆசிர்வதிக்க ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் இருவரினதும் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"நளினி இல்லம்"
கருவலடி. ஒழுங்கை,
கொக்குவில்.

(15536)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**இம்மானுவேல் யோசப் ஹென்றி**

தோற்றம்: 1930 - 12 - 25 மறைவு: 1990 - 12 - 20

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக குராலவத்தை புனித தெரேசம்மாள் ஆலயத்தில் 1991 - 1 - 19 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி - மனோன்மணி,
மகன் - பெனெற்

குராவத்தை,
சுன்னாகம்.

(15543)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 28 — 07 — 1966



மறைவு: 19 — 01 — 1990

**யோசப் கரோலின் மரினா**

(றதனி)

அன்பின் உருவே றதனி!
எம்மை நீ பிரிந்து மறைந்து இன்றோடு ஓர் ஆண்டு ஆகிவிட்டது. ஆயினும் உன் உரு எம் கருமணியில் காலமெல்லாம் அகலாது!

உமது ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்
ஐயா, அம்மா, சகோதரர்கள், மாமன்மார்,
மாமிமார், அன்ரிமார், அங்கிள்மார்.

இல. 9, 5 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(15527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org